# DEPOSITION OF WITNESS

(Chapter XXV Code of BNSS)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 26/2025 LW- 2 PW- 2

Name : பிரபாகர் ( கண்ணுற்ற சாட்சி)

Father's/Husband's Name : பழனியப்பன்

Village : அண்ணாநகர்

Taluk : நத்தம்

District : திண்டுக்கல்

Age : 30/2025

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 09th day of October 2025

( எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வந்து என் அப்பா அ.சா.1உடன் நகைக்கடை நடத்தி வருகிறேன். அ.சா.1 என் அப்பா. ஆஜர் எதிரியை தெரியும். ஆஜர் எதிரியுடன் கடந்த 16 வருடங்களாக வெள்ளிக் கொலுசு வாங்கல் கொடுக்கல் சம்பந்தமாக பழக்கம் இருந்து வந்தது. அவ்வகையில் கடந்த 20.12.2021ம் தேதிவரை ஆஜர் எதிரியிடமிருந்து 7 கிலோ 83 கிராம் வெள்ளிப் பொருட்களை வாங்கியிருந்தோம். பின்னர் 2021ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஆஜர் எதிரி கொடுத்த வெள்ளிப் பொருட்கள் தரமற்றதாக இருந்ததால் 5 கிலோ 577 கிராம் எடையுள்ள பழைய வெள்ளிப் பொருட்களை ஆஜர் எதிரியிடம் கொடுத்துவிட்டோம். மீதமுள்ள 1 கிலோ 506 கிராம் எடையுள்ள பழைய வெள்ளிப் பொருட்கள் ஆஜர் எதிரிக்கு நாங்கள் கொடுக்க வேண்டியிருந்தது.

2. இந்நிலையில் கடந்த 25.05.2022ம் தேதி காலை 11.30 மணியளவில் நானும், என் அப்பாவும் சில வாடிக்கையாளர்களும் நத்தம் கடை வீதியில் உள்ள எங்கள் கடையான பவித்ரா ஜூவல்லர்ஸ்ல் இருந்தபோது, ஆஜர் எதிரி எங்கள் கடை வாசலில் வந்து நின்று கொண்டு மீதமுள்ள பழைய வெள்ளிப் பொருட்களை தருமாறு கேட்டார். கடையில் வாடிக்கையாளர்கள் இருப்பதால் கொஞ்ச நேரம் இருங்கள், வாடிக்கையாளர்களை அனுப்பி வைத்தபின் பொருளாகவோ, பணமாகவோ தருகிறோம் என்று சொன்னோம். அதற்கு எதிரி என் கணக்கை முடித்துவிடுவாயா என்று கேட்டு, கோத்தா, கொம்மா, தேவிடியா மகனே என்று அசிங்கமாக பேசிக்கொண்டு உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன் என்று சொல்லிக் கொண்டே கடைக்குள் வந்து எனக்கு 10 லட்சம் ரூபாய் கொடுக்க வேண்டும் என்று கேட்டார். அப்போது கடைக்கு வந்த என் அப்பா எதிரியிடம் பேசிக் கொள்ளலாம், இரு என்று சொன்னதற்கு என் அப்பாவை கையால் அடித்து கல்லாப்பெட்டியின் மீது தள்ளிவிட்டார். என்னையும் அடித்து பூஜை அறையின் அருகில் தள்ளிவிட்டார்.

3. பின்னர் கடையின் ஷோ கேஸ் மற்றும் கம்ப்யூட்டர் தராசு முதலியவைகளை வைத்து கடையில் இருந்த சுமார் 6 கிலோ எடையுள்ள வெள்ளிக் கொலுசுகளை அவர் வைத்திருந்த பையில் எடுத்து வைத்துக் கொண்டார். அதைப் பார்த்த என் கடையின் வாடிக்கையாளர்களான பூமி, அழகம்மாள், முருகேசன் ஆகியோர் ஏன் இப்படி செய்கிறீர்கள், பேசிக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். அதற்கு ஆஜர் எதிரி நீங்க யாருடா, வெளியே போடா என்று அவரை மிரட்டினார். வாடிக்கையாளரிடம் காண்பிப்பதற்காக டிரேயில் வைக்கப்பட்டிருந்த வெள்ளிக் கொலுசுகளையும் எதிரி எடுத்துக் கொண்டார். அப்போது எங்கள் சத்தம் கேட்டு பக்கத்து கடைக்காரர்களான செல்வராஜ் மற்றும் முத்து ஆகியோர் வந்து ஆஜர் எதிரியை சத்தம் போட்டு கடையில் அமர வைத்தார்கள். தற்போது எதிரி சட்டையை கழற்றி

வைத்து விட்டு உங்களைக் கொல்லாமல் விடமாட்டேன், நீங்கள் எப்படி வியாபாரம் செய்கிறீர்கள் என்று பார்க்கிறேன் என்று மிரட்டினார்.

4. பின்னர் நான் காவல் நிலையம் சென்று சார்பு ஆய்வாளர் திரு.மாரியப்பன் என்பவரை உதவிக்கு அழைத்து வந்தேன். சார்பு ஆய்வாளர் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு ஆஜர் எதிரியை சத்தம் போட்டார். பின்னர் எதிரி எங்கள் கடையில் இருந்து எடுத்து வைத்திருந்த வெள்ளிப் பொருட்களை எங்களிடம் திரும்ப கொடுத்துவிட்டு கணக்கு புத்தகங்களுடன் காவல் நிலையம் வருமாறு சொல்லிவிட்டு சென்றார். அதன்பேரில் நாங்கள் மதியம் சுமார் 12.00 முதல் 1.00 மணியளவில் எங்களுடைய வரவு – செலவு கணக்கு புத்தகங்களுடன் காவல் நிலையம் சென்றோம். எதிரியிடம் கேட்டதற்கு அவரது கணக்கு புத்தகங்கள் மதுரையில் இருப்பதாக சொன்னதால் அவைகளை எடுத்துக் கொண்டு அன்றைய தினம் மாலையில் காவல் நிலையம் வருமாறு சொல்லி அனுப்பி வைத்தார். பின்னர் நாங்கள் கடைக்கு வந்து உடைந்த பொருட்களை சுத்தம் செய்து கொண்டிருந்தோம்.

5. மீண்டும் மதியம் 2.00 மணியளவில் ஆஜர் எதிரி எங்கள் கடைக்கு வந்து கோத்தா, கொம்மா என அசிங்கமாக பேசி உங்களைக் கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டினார். அப்போது வாசலில் நின்று கொண்டிருந்த என் அப்பா எதிரியை தடுத்து இருப்பா என்று சொன்னபோது, எதிரி கையால் என் அப்பாவை ஓங்கி அடித்து படிக்கட்டில் தள்ளிவிட்டார். படிக்கட்டில் அடிபட்டதில் என் அப்பாவின் வலது பக்க தோள்பட்டையில் ஜவ்வு விலகி பலத்த காயம் ஏற்பட்டது. அதை தடுக்க சென்ற என்னையும், எதிரி தள்ளிவிட்டதில் உடைந்த கண்ணாடி துண்டுகள் குத்தி எனது வலது கை மோதிர விரலில் ரத்தக் காயம் ஏற்பட்டது. அப்போது எங்கள் கடையிலிருந்து பக்கத்து கடைக்கு சென்று வெள்ளிக் கொலுசு வாங்கிவிட்டு திரும்பி வந்து கொண்டிருந்த பூமி, அழகம்மாள், முருகேசன் ஆகியோர் சத்தம் போட்டு அனுப்பி வைத்தார்கள். பின்னர் நானும், என் அப்பாவும் வீட்டிற்கு சென்று மருந்து போட்டுக்

கொண்டோம். பின்னர் வலி அதிகமாக இருந்ததால் மறுநாள் காலையில் நானும், என் அப்பாவும் நத்தம் அரசு மருத்துவமனையில் வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டோம்.

6. என் அப்பாவிற்கு ஸ்கேன் எடுக்க வேண்டும் என்று மருத்துவர் கூறியதால் திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றேன். அங்கு ஸ்கேன் எடுத்து பார்க்கப்பட்டதில், என் அப்பாவிற்கு சவ்வு விலகி உள்ளதால் நுட வைத்திய சாலையில் சிகிச்சை எடுத்துக் கொள்ளுமாறு அனுப்பி வைத்தார்கள். அதன் பின்னர் துவரங்குறிச்சியில் உள்ள நுட வைத்திய சாலையில் என் அப்பா ஒரு வார காலம் சிகிச்சை எடுத்துக் கொண்டார். மறுநாள் 27.05.2022ம் தேதி நத்தம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். எங்கள் கடையில் எதிரி தாக்கியதால் உடைந்த பொருட்களின் சேதம் சுமார் 1 லட்சம் ரூபாய் ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

போதிய வாய்ப்புகள் வழங்கப்பட்டும் குறுக்கு விசாரணை செய்யாததால் முடித்து வைக்கப்படுகிறது.

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

J.Aafreen Begum

Digitally signed by J.Aafreen Begum
Date: 2025.10.09 17:03:25 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்